3rd September 1959]

SRI V. SUBBIAH : ஜமீந்தாரி பாரஸ்டுகளில் இருக்கும் வாட்சர்களுக்கும் நம் அரசாங்க பாரஸ்டுகளில் இருக்கும் வாட்சர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் அது நீக்கப்படுமா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : ஜமீந்தாரி பாரஸ்டுகள் என்று இப்போது ஒன்றும் இல்லை. அந்த பாரஸ்டுகள் எல்லாம் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் வாட்சர்களின் சம்பள விகிதம் ஒரே மாதிரியாகத்தான் நிர்ணயிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த காட்டிலாகா வாட்சர்கள் டெம்பரரியாக ஒர்க் சார்ஜ் என்ற முறையில் இருக்கிறார்களா அல்லது அவ்வப்போது வேலை நிமித்தமாக டெம்பரரியாக நிரந்தர காலத்திற்கு அமர்த்தப்படுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'மெட்ராஸ் பாரஸ்டு கோட்' என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதிலே எழாவது செக்ஷன் பி உள் பிரிவு படி வருஷா வருஷம் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். சம்பளம், அதற்குமேல் 'டியர்னஸ் அலவன்ஸ்' கொடுக்கப்படுகிறது. மேலும் ஸ்பெஷல் காம்பன்சேடரி அலவன்ஸ் என்று மாதம் 17 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : சார், காடுகளில் வேலை செய்யும் வாட்சர்கள், காடுகளில் உள்ளே புகுந்து தங்கள் உயிரையே பணயம் வைத்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கான விதிகள் செய்யும்போது அவர்களை உத்தியோகத்தில் நிரந்தரமாக்குவதைப் பற்றி சர்க்கார் கவனிக்குமா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM : எவ்வளவு நிரந்தரமாக்க தேவையோ அவ்வளவுக்கு நிரந்தரமாக்கப்படுவார்கள். இதையெல்லாம் அனுசரித்துத்தான் விதிகள் செய்யப்படும்.

Police Out-post for Jaffarabad

*93 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to open a Police Out-post at Jaffarabad near Vaniyambadi?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Government Basic Training School, Paramakudi

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. ராமச்சந்திரன் சபையில் இல்லாததால் அவருடைய கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சடிக்கப்படும்.

* 94 Q.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to construct buildings for the Government Basic Training School, Paramakudi in Ramanathapuram district and if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. There is no proposal to construct buildings for the Government Basic Training School, Paramakudi.

Medical concession to Members of the Legislature

* 95 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to extend free medical concession to the Members of the Legislature?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

[3rd September 1959

SRI A. A. RASHEED : Sir, is it a fact that free medical attendance is given to Government employees? If so, why not the Government extend this facility to the members of the Legislature?

THE HON. SRI M. A. MANICKAVELU : This matter was once considered. Extension can go to any extent. But now it is stopped with Government servants. If we go on extending this, it can be extended to so many other persons also.

SRI V. K. KOTHANDARAMAN : சார், 1,500 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய அமைச்சர்களுக்கு இலவச வைத்திய வசதி இருக்கும்போது, 150 ரூபாய் வாங்கக்கூடிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் இந்த வசதியை மறுப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டசபை அங்கத்தினர்கள் வேறு வேலே பார்க்கலாம். மந்திரிகள் மந்திரி வேலே மட்டும்தான் பார்க்க முடியும். மந்திரிகளுக்கு என்று தனியாக ஏற்பட்டது இது. எல்லா இடங்களிலும் இருக்கக் கூடியதுதான். இங்கு மட்டும் மந்திரிகளுக்கு என்று புதிதாக ஏற்படுத்திக் கொள்ளவில்லே.

SRI S. M. ANNAMALAI : கெஜட் பதிவுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இலவச வைத்திய வசதி ஏற்பாடு செய்கிருர்களே, அது மாதிரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வசதியை அளிக்க சர்க்கார் ஏன் முன் வரக் கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்ட மன்ற உறுப்பினர்கள் வேறு. 'அபிஷியல்ஸ்' வேறு.

SRI V. SANKARAN : சட்ட மன்ற அங்கத்தினர்கள் 'கவர்ன் மெண்ட் சர்வெண்ட்ஸ்' என்ற வியாக்கியானத்தில் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லே என்று நான் சொன்னேன்.

SRI S. LAZAR : இந்த வசதி வேண்டும் என்று சட்ட மன்ற அங்கத்தினர்கள் யாராவது அரசாங்கத்திற்கு எழுதி உள்ளார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இல்லே, எனக்குத் தெரிந்த வரையில்.

SRI V. K. KOTHANDARAMAN : மாதம் 100 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்கு கொடுக்கக்கூடிய மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வசதியை, இந்த ஆண்டிலேயே, 150 ரூபாய் வாங்கும் எம்.எல்.ஏ-க்கு, மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வாங்கலாம் என்று ஒரு விதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இது போன்று, 100 ரூபாய் வருமானத்திற்கு மேற்கொண்டு இருக்கற காரணத்தினுல் இந்த சலுகை கிடையாது என்று இருக்கும் விதியை மாற்றி அமைக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த சலுகை உத்தி யோகத்தில் உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற அடிப்படையில் கொடுக்கப் படுகிறது. அங்கத்தினர்கள் 'நான் அபிஷியல்ஸ்' என்ற அடிப்படையில் இது கொடுக்கப்படவில்லே.

MR. SPEAKER : The Hon. the Minister for Industries is not in Madras. All the questions to be answered by him will, therefore, be taken up day after to-morrow.